# கிறிஸ்து மீண்டும் வருவது மிகவும் சிறந்தது




## 5.5 பரிசுத்த ஆவியின் வரங்கள்

**வேத வசனம்:** **மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தி லும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரணபுருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,**

*எபேசியர் 4:11,12*

**அறிக்கை:** **தேவன் தம்முடைய விருப்பத்தின்படி நமக்கு வெவ்வேறு ஆவிக்குரிய வரங்களைக் கொடுப்பார்**



**சத்தியம்:** மாற்றுத் திறன்களைக் கொண்டிருக்கும் சிலர் மற்றவர்களுக்கு உதவி செய்வதைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்பட்டிருக்கிறீர்களா?

**பாடம்** ஏன் சில மனிதர்களால் அசாதாரண திறமையுடன் பிறருக்கு உதவி செய்ய முடிகிறது என்று எப்போதாவது வியந்திருக்கிறீர்களா?

அப்போஸ்தலர் பவுல் சில வாலிபர் மேல் கை வைத்தவுடன் ஆவியானவர் அவர்கள் மேல் இறங்குகிறார். உடனே அவர்கள் பற்பல பாஷைகளைப் பேசவும் தீர்க்கதரிசனங்களைச் சொல்லலும் துவங்குகிறார்கள் என்பதை அப். 19:1-7 மூலம் அறிகிறோம். “ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்.” (1 கொரி. 14:2)

**1 கொரிந்தியர் 12:7-11:** *“ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டி ருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண் ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்.”*

**ரோமர் 12: 6-8:** *“நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன். பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன், முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன், இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்.”*

**போதனை:** 1. ஆண்டவர் இயேசு பரிசுத்த பூமி முழுவதும் நடந்துசென்று தேவையில் உள்ளோருக்கு உதவினார்.

2. நோக்களால் வருத்தப்பட்டோரை சுகமாக்கவும் ஆவியில் அடிமைப்பட்டோரை விடுவிக்கவும், இயேசுவுக்கு அதிகாரமும் அபிஷேகமும் இருந்தது.

3. தேவன் வித்தியாசமான ஆவிக்குரிய வெகுமதிகளைத் நமக்கு தந்து நாம் பிறருக்கு உதவிகள் செய்ய நம்மை நியமித்திருக்கிறார்.

4. ஆவிக்குரிய வரம் என்பது நம்மால் செய்ய இயலாத செய்ய செயலை செய்யவைக்கும் ஒரு அசாதாரண திறமை.

5. வேதாகமம் போதிப்பது என்னவென்றால், 1. வாஞ்சையுடன் தேடவேண்டும், 2.விசுவாசத்தில் வெற்றிக்கொள்ள வேண்டும், 3.ஆவிக்குரிய வெகுமதியை கருத்தாக பயிற்சி செய்யவேண்டும்.

**முடிவுரை:** 1 கொரிந்தியர் 14:1-4 போதிப்பது என்னவென்றால், நாம் ஆவியானவர் தரும் வரங்களை நாடவேண்டும்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.